1978 மார்ச் 1]

அரசினர் நலப்பள்ளி, கொண்டல்.

* 336. வின.—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் —

கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டத்தில், கொண்டல் அரசினர் நலப்பள்ளியை உயர் தொடக்கப் பள்ளியாக மாற்ற அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கொண்டலில் உள்ள அரசினர் நலப் பள்ளி 1974–1975 முதல் உயர் தொடக்கப் பள்ளியாக இயங்கி வருகிறது.

திரு. கே. சுப்பிரவேலு : தலைவரவர்களே, சீர்காழி வட்டத்தில் கொண்டலில் ஆரம்பப் பள்ளியாக இருந்த பள்ளி உயர்நிலைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு, இடையிலே இரண்டாண்டு அதற்கு அனுமதி கிடைக்காமல் ஆகிவிட்டது. இப்போது மீண்டும் ஆரம்பிப்பதாகச் சொல்கிறார்கள். அதிலே எத்தனை ஆசிரியர்கள், எந்த வகுப்புவரை நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஏற்கெனவே அங்கிருந்த மாவட்ட நல அதிகாரி அவர்கள் அரசாங்கத்தின் ஒப்புதல் பெறாமலேயே அந்தப் பணியைச் செய்து விட்டார்கள். ஆகவேதான் காலதாமதம் ஏற்பட்டது. இப்போது 7-வது வகுப்புவரை தொடங்க அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. கல்வித் துறையைக் கலந்தாலோசித்து, இந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேங்கைவாடி அரிசன குடியிருப்பு

* 337 வின.—திரு. வ. துலுக்காணம் :— மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதியில், வேங்கைவாடி அரிசன் காலனியில் அரிசனநல வீடு கட்டும் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டி பாதி கட்டடங்களாக உள்ளது பற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் என்றால், அந்தக் கட்டடங்களையும் இதே போல் பாதியிலேயே நிற்கும் பல காலனிகளில் உள்ள கட்டங்களையும் உடன் கட்டித்தர எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) வேங்கைவாடி அரிசன காலனியில் கட்டுவதற்கு எடுக்கப் பட்டு பாதியில் நிறுத்தப்பட்ட வீடுகள் எதுவும் இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. வ. துலுக்காணம் : அங்கே இன்னும் வீடுகள் கட்டப் படாமல் இருக்கிற நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைச் சரியாக விசாரணை செய்து மேற்கொண்டு கட்டுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, 1974 முதல் 1976-ம் ஆண்டு வரை கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட வீடுகளின் மொத்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்று அப்போது இருந்த அரசு உத்தரவிட்டது. மொத்தம் அந்த ஊரில் 80 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டது. அரசாங்க உத்தரவின் காரணமாக 20 வீடுகள்தான் கட்ட முடியும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. எஞ்சி இருக்கிற வீடுகள் கட்டுவது பற்றி இனிமேல் பரிசீலனை செய்ய வேண்டியதாகும்.

திரு. வ. துலுக்காணம்: ஃபவுன்டேஷன் போடப்பட்டு பாதியிலேயே நிற்கின்றது. அரசாங்க உத்தரவு இல்லாமல் ஃபவுன்டேஷன் போட மாட்டார்கள். ஆகவே, ஃபவுண்டேஷன் போட்டு கட்டி முடிக்கப்படாமல் இருக்கும் அந்த வீடுகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : என்னிடம் இருக்கிற விவரப்படி ஃபவுன்டேஷன் போடப்பட்ட வீடுகள் எதுவும் கட்டப்படாமல் இல்லை. ஃபவுன்டேஷன் போட்ட வீடுகள் எல்லாம் கட்டப்பட்டுள்ளன. கட்டப்பட வேண்டிய மனைகள்தான் அப்படியே இருக்கின்றன என்பதுதான் இங்கே இருக்கிற விவரம். படிப்படியாக இவை கட்டப்படும்.

பொருள் போக்குவரத்து கழக ஊழியர்கள்